புதிய அவையம்
(Peer -Reviewed Journal)
ISSN: 2456-821X
Vol. 08, Issue 01 - June 2024

# ஆணாதிக்கத்தை உள்ளிருந்து அழிக்கும் பெண்குரலாய் ஔவையின் சங்க அகநானூற்றுப் பாடல்கள்

**முனைவர் ஏ. சைலஜா**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் – 635601.

## முன்னுரை

உயிருள்ளவை, உயிரற்றவை அனைத்துமே சமூகம்தான். அதில் மனித உயிர்களைக் குறித்துப் பேசும்போது சூழலை ஒதுக்கிவிட முடியாது. அதுபோலத்தான் ஆணைக் குறித்துப் பேசும்போது பெண்ணையும் பெண்ணைக் குறித்துப் பேசும்போது ஆணையும் ஒதுக்கிவிட முடியாது. ஆணாதிக்கச் சமூகத்தில் பெண் குறித்துப் பேசப்படும் இடங்களும் பேசப்படாத இடங்களும் கலந்தே காணப்படுகின்றன. அப்படிப் பேசப்படாத இடங்களும் பேசும் இடங்களும் பெண் விடுதலைக் கருத்தியல் கட்டமைப்பில் முதன்மையான இடங்கள். பெரும்பாலான பெண்ணிய ஆய்வுகள் பெண்விடுதலைக் கருத்தியலை ஆணாதிக்கத்திற்கு எதிர்நிலையில் துலக்கமாகத் தெரியும் கருத்துகளைப் பிரகடனப்படுத்தி வருகின்றன. துலக்கமாகத் தெரிவது மட்டும் எதிர்ப்பு அல்ல. துலக்கமற்ற நிலையில் மறைந்து ஆணாதிக்கத்துள்ளே பயணம் செய்துகொண்டு கரையான்போல் அரிப்பதும் எதிர்ப்புதான். சொல்லப்போனால் கரையான் அரிப்பு உள்முகமானது. ஆற்றல் வாய்ந்தது. ஆணாதிக்கத்தால் அடையாளம் காணமுடியாதது. ஆணாதிக்கம் அடையாளம் கண்டுவிட்டால் பெண்ணை ஒடுக்குவதற்கு அது தனது முழு அதிகாரத்தையும் செலுத்தும். கரையான் அரிப்பு ஆணாதிக்கத்தை எதிர்ப்பதை அறிவிக்காமல் ஆணாதிக்கத்தை அழிப்பது. அத்தகைய ஒரு செயலைச் சங்ககால ஔவையின் பாடல்களில் காண முடிகிறது.

சங்ககால ஔவையின், "முட்டுவேன்கொல்? தாக்குவேன் கொல்?.." (குறு.28), "..எவ்வழி நல்லவர் ஆடவர் / அவ்வழி நல்லை வாழிய நிலனே!" (புறம்.187) என அக, புறப் பாடல்கள் பெண் உரிமைக்குரலையும் ஆணாதிக்கச் சார்பையும் பதிவு செய்திருப்பதைப் பார்க்க முடிகிறது. வெளிப்படையான ஆணாதிக்கச் சார்புக் குரலும் பெண் விடுதலைக்குரலும் ஔவை என்ற ஒருபுலவரிடமிருந்து வெளிப்பட்டுள்ளது. என்றால் ஔவை முழுமையான ஆணாதிக்க எதிர்ப்பை முதன்மைப்படுத்தவில்லை என்பது தெரிகிறது. மாறாக ஆணாதிக்கச் சமூக ஏற்பில் இருந்துகொண்டு பெண் உரிமையைப் பேசியுள்ளார். எப்படி அதிகாரத் தன்னிலை பல முகங்களைக் கொண்டதோ அதுபோலவே ஒடுக்கப்பட்ட தன்னிலையும் பல முகங்களைக் கொண்டது. இந்தப் பன்முகத் தன்மையைத் தேடித் தொகுத்து ஒருங்கிணைத்தல் ஒருவகை ஆய்வுச் செயலாகும். அதுபோன்ற ஒரு ஆய்வுச் செயலை வெளிப்படுத்துவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

அகநானூற்றில் ஔவையார் நான்கு பாடல்கள் பாடியுள்ளார். அந்நான்கு பாடல்களும் ஆய்வின் எல்லையாகும். நான்கு பாடல்களும் பாலைத் திணைப் பாடல்களாக அமைந்துள்ளன. பாலை என்பது பிரிவு சார்ந்தது. பிரிவு அதாவது 'அகற்சி' ஒன்றை உருவாக்கம் ஆற்றல் வாய்ந்தது. உருவாக்கம் நிகழ எந்த ஒன்றையும் ஒட்டிவைத்துப் பார்க்கக்கூடாது. மாறாக அகன்று நின்று பார்க்க வேண்டும். 'அகன்று நிற்றல்'ஐ ஒரு தமிழ்ச் சிந்தனையாகத் தமிழவன் முன்வைக்கிறார் (பார்க்க: நவமார்க்சிய வழியில் திராவிடத் தமிழ்ச் சிந்தனைகள்) என்பது குறிப்பிடத்தக்கது. அகத்தைப் பொருத்தமட்டில் தலைவி என்பவள் தலைவனால் பாதிக்கப்படக்கூடியள். அந்தப் பாதிப்பை உணர்வதற்கும் வெளிப்படுத்துவதற்கும் மாற்றுவதற்கும் அகன்று நிற்றல் தேவைப்படுகிறது. அதனால்தான் ஔவை பாலைத்திணைப் பாடல்களைத் தெரிவு செய்துள்ளாரோ என்று தோன்றுகிறது. இக்கருதுகோளின் அடிப்படையில் கட்டுரை அமைகிறது.

**பாடல் 11**

சங்க இலக்கியத்தைப் பொருத்தமட்டில் தலைவன் பொருள் சார்ந்து தலைவியைப் பிரிந்து செல்வான். அது ஔவைக்கு எப்பொழுதும் சிக்கலாக இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அந்தப் பிரிவு ஏற்படுத்தும் வதைப்புதான் ஔவைக்குச் சிக்கலாக இருந்திருக்கிறது. அதனால்தான் அவ்வதைக்கு எதிராக அவள் வினையாற்றுகிறாள். தலைவன் பிரிவால் காமநோய்க்கு ஆளான தலைவி, தலைவன் என்னை உடன் அழைத்துச் சென்றிருந்தால், "மெய்புகுவு அன்ன கைகவர் முயக்கம்/அவரும் பெறுகுவர்.." என்று ஔவை சமத்துவம் பேசுகிறாள். காதல்நோய் தலைவனுக்கும் உரியது என்று ஆணையும் உள்ளடக்கி அவனுக்கும் சேர்த்துப் பேசுகிறாள். இப்பேச்சு ஆணாதிக்கச் சமூக அமைப்பைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப வினையாற்றுவதன் வெளிப்பாடு. ஆணாதிக்கச் சமூக அமைப்பைப் புறவயமாக

*அணுகாமல் அமைப்புக்குள்ளிருந்து அதாவது அகவயமாக அணுகுகிறாள். காதல்நோய் என்னும் பாடுபொருளின்வழி அணுகுகிறாள். மனிதவாதத்தைப் பின்னுக்குத் தள்ளி விஷயத்தை முதன்மைப்படுத்துகிறாள். சமத்துவநிலை கிடைத்திருந்தால், என்னுடைய "பழிதீர் கண்ணும் படுகுவ மன்னே!" அதாவது குற்றமில்லாத கண்கள் நன்றாக உறங்கியிருக்குமே என்கிறாள்.*

*பொதுவாகப் பெண்கள் தலைவன் பிரிந்து சென்றுவிட்டால் புலம்பலாமே தவிர, "கிழவோற் சேர்தல் கிழத்திக்கு இல்லை" (தொல்.பொருள்.206) என்கிறது தொல்காப்பியம். ஔவையின் குரல் உறுப்புகள் வாடுவது குறித்த புலம்பலாக இல்லாமல் தலைவனை உடன் அழைத்துச் சென்றிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை முன்வைப்பதாக இருக்கிறது. தலைவி தலைவனிடம் நேரடியாகச் செல்லாமல், தலைவன் அழைத்துச் சென்றிருந்தால் உடல் முயக்கத்தைத் தலைவரும் பெற்றிருப்பாரே என்று தனது விருப்பத்தைத் தோழியிடம் எடுத்துக்கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது. அதனால் வெளிப்படையாக அகவிதிக்கு எதிரான தோற்றம் தரவில்லை. ஆனால் உள்முகமாக அகவிதியை மீறியிருக்கிறது (தலைவனுடன் சென்று சேர்தல்). சொல்லப்போனால் ஆணாதிக்கச் சமூக அமைப்பை எதிர்ப்பதற்கு ஆணையும் உள்வயப்படுத்தியிருக்கிறது. ஆணுடன் செல்வது குறித்து ஔவை பேசியிருப்பதால், அச்சம், நாணம், மடன் ஆகிய பெண்களுக்குரிய விதிகளையும் ஔவை மீறியிருக்கிறாள். ஆனால் அவை பாடலில் வெளிப்படையாக அமையாததால் ஆணாதிக்கத்திற்கு விதிமீறலாகத் தெரியவில்லை. இப்படி ஔவை பேசாமல் விட்டதிலும் பேசியதிலும் அகவிதிகளை மீறியிருக்கிறாள். அந்த மீறலை ஆணாதிக்க அமைப்பு ஏற்றுக்கொள்ளும் வண்ணம் செய்திருக்கிறாள். இது ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான உத்தியாகும்.*

***பாடல் 147***

*தலைவி தோழியிடம் பிரிவின் ஆற்றாமையை உணர்த்தும் பாடல். தலைவனுடைய பிரிவுக்கு மருந்தில்லை என்பதை, "தோளும் தொல்கவின் தொலைய நாளும்/பிரிந்தோர் பெயர்வுக்கு இரங்கி/மருந்து பிறிதின்மையின் இருந்து/வினை இலனே" என்ற வரிகள் உணர்த்துகின்றன. ஒரே மருந்து தேடிச்செல்லல்தான் என்பதை, "வெள்ளிவீதியைப் போல நன்றும்/செலவு அயர்ந்திசினால்.." என்ற வரிகளில் வெளிப்படுத்துகிறாள். தேடிச்செல்லல் விதியன்று என்றாலும் அதற்கான நியாயத்தை வலுப்படுத்த தலைவனைத் தேடிச்சென்ற வெள்ளிவீதியின் வரலாற்றைக் கைக்கொள்கிறாள். காமநோய் ஆணாதிக்கம் விரும்புகின்ற ஒன்று. அதற்கு ஆண்தான் மருந்து என்பதை, எதிர்மறையாக காமநோய்க்கு வேறு மருந்தில்லை என்ற அழுத்திச்சொல்லும்போது அது ஆணாதிக்கத்திற்குரிய பாடலாகி விடுகிறது. அதன்பிறகு தேடிப் போகிறேன் என்று சொல்லும்போது அதைக் காமநோயின்*

*நீட்சியாக ஆணாதிக்கம் பார்க்கிறது. உண்மையில் அது அகவிதிமீறல். மீறலை ஆணாதிக்க விருப்பத்தில் பிசைந்து ஊட்டுவதன்வழியாகப் பெண்ணுக்கான உரிமைக்குரல் வெளிப்படுகிறது. அது வரலாற்றின் தொடர்ச்சியாகவும் மாற்றப்படுகிறது. வெள்ளிவீதி சென்றாள்; நான் செல்கிறேன்; நீங்களும் செல்லுங்கள் என்றொரு வழிகாட்டுதலைப் பாடல் வைத்திருக்கிறது.*

*முந்தையப் பாடலைப்போலவே இப்பாடலிலும் அச்சம், நாணம், மடன் மீறப்பட்டிருக்கிறது. அவை பாடலில் பதிவு செய்யப்படாமையால் ஆணாதிக்கத்திற்குத் தெரியவில்லை. இங்கு ஆணாதிக்கம் பெண் ஒடுக்குமுறைக்கு எதிராக நிறுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஏன் எதிராக நிறுத்தப்படவில்லை என்றால், "எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது/ தானமர்ந்துவரூஉம் மேவற்றாகும்" (தொல்.பொருள்.24) என்று தொல்காப்பியம் கூறுகின்றது. இன்பம் அனைத்து உயிர்களுக்கும் உரியது என்பதால்தான் காதலுக்கான அகச்செயல்களை ஔவை ஏற்கிறாள். அதில் காதலின் தேவையை நிறைவேற்றத் தடையாக இருக்கும் கட்டுப்பாடுகளுக்கு எதிரான செயலில் மட்டும் ஔவை தனது குரலைப் பதிக்கிறாள். ஔவை ஆணுடனான இன்ப நுகர்ச்சியை ஏற்பதில் இயற்கைத் தன்மை அடங்கியிருக்கிறது. ஆணாதிக்கம் முழுவதும் செயற்கைத் தன்மை கொண்டதால் ஔவையின் இயற்கைத்தன்மையை அடையாளம் காணமுடிவதில்லை. அதனால் ஆணாதிக்கம் ஔவையின் உள்எதிர்ப்பை அகவிதியை வலிமைப்படுத்துவதாக நினைத்துக் கடந்துவிடுகிறது. அது உண்மையில் இயற்கைசார் இன்பத்திற்கு எதிராக நிற்கும் ஆணாதிக்கத்தை ஊடறுக்கும் செயல்.*

***பாடல் 273***

*"நலம்கவர் பசலை நலியவும் நம்துயர்/அறியார்கொல்லோ?.." என பிற காதல் பாடல்களைப் போலவே அகவிதிகளுக்குட்பட்டு காமநோயால் உறுப்பு அழிதல் குறித்துத் தலைவி கூறுவதாக அமைந்துள்ளது. இப்பாடல் தலைவி அறிவுமயங்கிச் சொல்வதாகக் கூற்று அமைந்துள்ளது. பாடலில் 'நம்துயர்' என்று வருவதால் இது தலைவி தோழியிடம் கூறும் தலைவி கூற்றுப் பாடல்தான். "அலர் அரும்பு ஊழ்ப்பவும் வாராதோரே" அலர் மொட்டாகத் தோன்றிய சூழலிலும் வாராதவர் என்று களவைச் சமூகம் அறிந்துகொள்வது குறித்து வருத்தப்படுகிறாள். இவையெல்லாம் அகவிதிகளுக்குட்பட்ட அதாவது ஆணாதிக்கச் சமூக ஏற்பிலிருந்து உருவான வெளிப்பாடுகள். அந்த ஆணாதிக்கம் கட்டமைத்த அகத்தை மறுத்தால் அது இன்பத்தை மறுத்தலாகும். இன்பத்தை மறுத்தல் இயற்கைக்கும் தமிழின் தொல் அறத்திற்கும் எதிரானது. அதை உணர்ந்ததாக ஔவையின் பாடல்கள் அமைந்துள்ளன.*

*மேற்சுட்டிய பாடல்கள் தலைவன் உடன் அழைத்துச் செல்வது குறித்தும் தலைவனிடத்துத் தலைவி செல்வது குறித்தும் அமைந்திருந்தன. இப்பாடலில் தலைவனை*

*அதாவது ஆணாதிக்கத்திற்குரியனை, "நம்மனத்து அன்ன மென்மை இன்மையின்/நம்முடை உலகம் உள்ளார்கொல்லோ?" என்கிறாள். பாடல்வரிகள் ஆண்மனம் வேறு பெண் மனம் வேறு என்றும் அதனால்தான் நம்முடைய உலகத்தை நினைக்கமாட்டாரோ என்று கூறிய அடுத்தநொடியே "யாங்கு என உணர்கோ" என்கிறார். உறுப்புநலன் அழிதலின் தொடர்ச்சியினூடே இரண்டு மனமும் வேறுவேறு (தலைவனை அவமதித்தல்) என்று அகவிதியை மீறுகிறாள். அடுத்து உடனே யான் என்னவென்று உணர்வேன் என்று கூறி அகவிதிக்குத் திரும்புகிறாள். இங்குப் பெண்ணுக்குரிய மென்மை ஆணுக்கு இல்லை என்று பெண்ணை மென்மையாகக் காட்டியிருப்பது ஆணாதிக்கத் தன்மைக்குரியதுதானே? என்ற கேள்வி எழுகிறது. ஆண் வீரம் சார்ந்தவன் என்பதை, "..எவ்வழி நல்லவர் ஆடவர்/அவ்வழி நல்லை வாழிய நிலனே!" (புறம்.187) என்ற பாடல்வரிகள் மூலம் ஔவை அங்கீகரித்திருக்கிறாள். இதுவரையிலான பாடல்களில் ஔவை தலைவன் தனது வீரத்தைக்கொண்டு பிரிவை விலக்கமாட்டானா? என்று கேட்கவில்லை. காரணம் வீரம் என்பது புறவிதி சார்ந்தது; மென்மை என்பது அகவிதி சார்ந்தது. இரண்டு விதிகளையும் ஔவை குழப்பிக்கொள்ளாததால் இரண்டு வகைமைகளிலும் பாடல்கள் சிறப்புற பாட முடிந்திருக்கிறது.*

*வீரம் சார்ந்த தலைவனிடம் மென்மையை ஔவை எப்படி எதிர்ப்பார்க்கலாம் என்ற கேள்வி எழும். அகத்தில் மென்மையாக இருக்கும் தலைவி புறத்தில் ஆண்குழந்தைகளை ஈன்றெடுத்தல், குழந்தைகளைப் போருக்கு அனுப்புதல், வீரமரணத்தை வரவேற்றல், போரைச் சமாதனப்படுத்துதல், கள் உண்ணுதல் ஆகிய வீரச்செயல்களுக்குரியவளாக மாறுகிறாள். அதேபோல புறத்தில் வீரமாக இருக்கும் ஆண்மகன் அகத்தில் மென்மையாக இருக்க வேண்டும். மாறாக இருப்பதில்லை. அதனால்தான் ஔவை ஆண்மகன் வேறு என்கிறாள். இயற்கை சிலநேரங்களில் சமனிலை குலைந்தாலும் அது தன்னைத்தானே சரிசெய்துகொள்ளும். அதுபோலத்தான் இயற்கைப் பண்பு கொண்டவர் சூழ்நிலைக்கு ஏற்ப வீரத்துடனும் மென்மையுடனும் வாழமுடியும். இயற்கைப் பண்பு இல்லாதவரிடம் வருவித்துக்கொண்ட செயற்கைப்பண்பு மட்டுமே மேலோங்கியிருக்கும். செயற்கைப் பண்புக்குரியவன் தலைவன். இயற்கைப் பண்புக்குரியவள் தலைவி. காதலுக்குத் தேவை மென்மைதான். பெண் மென்மையானவள் என்று ஆண் சொன்னால் அர்த்தம் வேறு; அதே மென்மையைப் பெண் சொன்னால் அர்த்தம் வேறு. இங்கு ஔவை சொன்ன மென்மை காதலுக்குரிய மென்மைப்பண்பு ஆணிடம் இல்லை என்பதாகும்.*

***பாடல் 303***

*தலைவி தன் நெஞ்சுக்கு உரைத்துக்கொண்ட பாடல். அவளும் அவள் நெஞ்சும் இங்கு நான் x நீ ஆகப் பிரிந்து உரையாடுகிறது. நான்xநீ உரையாடலைத் தமிழ் குணமாகத் தமிழவன்*

தனது ‘மொழிதல் கோட்பாடும் தமிழும்’ நூலில் முன்வைக்கிறார். ஒரு மனது இரண்டாக உடைந்து உரையாடிக்கொள்வதோடு ஒரு மாற்றத்தை நோக்கி எப்படி நகர முடிகிறது என்றால் ‘அகன்று நிற்றல்’ சிந்தனைதான். அகன்று நிற்கும்போது ஒன்றை உருவாக்க முடியும். சான்று : தலைவன் பிரிவுதான் தலைவியிடம் தலைவனைத் தேடிச்செல்லும் எண்ணத்தை உருவாக்குகிறது. இது ஒட்டிநிற்றலுக்கு எதிரானது. “நூலிலிருந்து அகன்று நின்றால்தான் நூலின் முழுமை மனதில் சேகரமாகும்” (தமிழவன், 20223:215). ஔவை தனது நெஞ்சிடமிருந்து தன்னை அகற்றி வைத்துக்கொள்ளும்போதுதான் உரையாடல் சாத்தியமாகிறது. உரையாடல்தான் மாற்றத்திற்கு வழிவகுக்கும். அத்தகைய ஒருபாடல் இது. “வருவர் என்றுணர்ந்த மடம்கெழு நெஞ்சம்/ஐயம் தெளியரோ! நீயே..” என்ற பாடல்வரிகள் மாலைநேரம் வந்துவிட்டது; குருவிகள் கூடடைந்துவிட்டன; பொருளீட்டி வருவதாகக் கூறிச் சென்ற தலைவன் வருவான் என்று நினைத்துக்கொண்டிருக்கும் நீயாகிய நெஞ்சிடம் அவன் வரமாட்டான் என்பதை நானாகிய தலைவி உணர்த்துகிறாள். இது அகவிதிக்குட்பட்ட உரையாடல்.

மேற்கூறிய உரையாடலின் நீட்சியாக, “அழிநீர் மீன் பெயர்ந்தாங்கு அவர்/ வழிநடைச் சேறல் வலித்திசின் யானே!” எனக் குளம் வற்றும்போது நீர்நிலையைத் தேடி மீன் இடம்பெயர்ந்து செல்வதுபோல் தலைவன் சென்ற வழியில் தலைவி செல்லத் துணிகிறாள் என்கிறது பாடல். நீர் இருக்கும் இடத்தில் மீன் இருப்பதுபோல் தலைவன் இருக்கும் இடத்தில்தான் தலைவி இருக்க வேண்டும். இப்பேச்சு அகவிதிக்கு எதிரானது. அதேநேரம் அவள் செல்வேன் என்றுதான் கூறுகிறாள். இது ஓர் உத்தி. சென்றுவிட்டதாகக் கூறினால் ஆணாதிக்கம் பாடலை அகவிதிக்கு முரணானது என்று கூறி அகப்பாடல் அமைப்பிலிருந்து வெளியேற்றிவிடும்.

**பாலைத்திணைப் பாடல்களும் ஔவையும்**

ஔவை பாடிய பாலைத்திணைப் பாடல்கள் நான்கில் மூன்று பாடல்கள் தலைவி *x* தோழி உரையாடலாகவும் ஒருபாடல் தலைவி *x* நெஞ்சு உரையாடலாகவும் அமைந்துள்ளன. தலைவி *x* தோழி உரையாடல் சார்ந்த மூன்று பாடல்களில் ஒன்று சமத்துவம் சார்ந்ததாகவும் மற்றொன்று வரலாற்று அடிப்படையில் தலைவி தலைவனைத் தேடிச் செல்ல விரும்புவதாகவும் இன்னொன்று தலைவனைத் தேடிச் செல்லத் துணிவதாகவும் அமைந்துள்ளன. தலைவி *x* நெஞ்சு உரையாடலாக அமைந்த ஒரு பாடல் ஆண் மனம் வேறு, பெண் மனம் வேறு என்று கூறுவதாக அமைந்துள்ளது. நான்கு பாடல்களும் அகவிதிகளை ஏற்றும் அகவிதிகளுக்கு முரணாகவும் அமைந்துள்ளன. அகவிதிக்குட்பட்ட பாடல்வரிகள் ஆணாதிக்கத்திற்குரியதாகவும் அகவிதிகளை மீறுகிற பாடல்வரிகள் பெண் உரிமைக் குரலாகவும் வெளிப்படுகின்றன. பெண் உரிமைக்குரல் அகவிதியின் தொடர்ச்சியாக

அமைந்துள்ளதால், அகவிதி மீறல் அகவிதியை வலிமைப்படுத்துவதாக அமைந்துவிடுகிறது. அதனால் அகவிதி மீறலும் அகப்பாடலுக்கான தோற்றம் கொள்கிறது. அதாவது அகவிதியாகிவிடுகிறது. அது அகவிதியாக வேண்டும் என்பதற்காகத்தான் தலைவனைத் தேடித் தலைவி செல்வதாக அமையாமல், தலைவன் தலைவியை அழைத்துச் செல்லவும் தேடிச் செல்லவும் விரும்புவதாகவும் துணிவதாகவும் பாடல்கள் அமைந்துள்ளன.

**முடிவுரை**

பெண் உரிமைக்குரல் ஆணாதிக்கக் குரலுக்குள் ஒளித்து வைக்கப்படுவதாலும் அது தலைவியின் அகம் சார்ந்ததாகவும் இருப்பதால் அகக்குரலாகும். தலைவி ஒட்டுமொத்த சமூகப் பெண்களின் பதிலியாக இருப்பதால் தலைவியின் குரல் பெண்குரலாகும். ஆணாதிக்கம் மையச் சமூகமாக இருப்பதால், பாடல் வரிகளில் பெரும்பான்மையும் அகவிதிக்குட்பட்டு ஆணாதிக்கத்திற்குரியதாக அமைந்துள்ளன. இவை வெளிப்படையாகவும் சமூக ஏற்புக்குரியதாகவும் அமைந்துள்ளதால் புறக்குரலாகும். அகம் என்றால் உள் அதாவது மனது. புறம் என்றால் வெளி அதாவது சமூகம். சங்ககாலச் சமூகத்தில் அகத்தைக் கட்டமைக்கும் பெண் உருவாக்குபவளாக இருக்கிறாள்; புறத்தைக் கட்டமைக்கும் ஆண் அழிப்பவனாக இருக்கிறான். உருவாக்குதல் இயற்கையோடு தொடர்புடையது. அழித்தல் செயற்கையோடு தொடர்புடையது. இயற்கை சமனிலை நோக்கி இயங்கக்கூடியது. அதனால்தான் ஔவையின் பெண் உரிமைக்குரல் ஆணாதிக்கத்திற்கு எதிர்நிலையில் ஆணை விலக்குவதாக அமையாமல், காதலைக் கட்டமைக்கும்பொருட்டு ஆணுக்கு இணையான உரிமைக் குரலாக அமைந்திருக்கிறது. பெண்ணின் உரிமைக்குரல் புறக்குரலோடு இணைந்த அகக்குரலாக இருப்பதால், அகவிதியாக ஆணாதிக்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. எனவே ஔவையின் குரல் ஆணாதிக்க அகவிதியை உள்ளிருந்து சிதைக்கும் பெண்குரலாக இருக்கிறது. ஆணாதிக்கத்தைச் சிதைப்பதற்காகத்தான் அகன்றுநிற்றலுக்கு வழிவகுக்கும் பாலைத் திணைப் பாடலை ஔவைத் தெரிவு செய்துள்ளார். இதுபோன்ற அகக்குரல்களை அடையாளம் காணும் செயல்தான் “பெண் ஆணிய இருப்பைக் கலைத்துப் போடும், சிதைவாக்கும் ஒரு திரளும் இருப்பாக இயக்கம் கொள்ள வேண்டும்” (ஜமாலன், 2020:86) என்ற பாலின உரையாடல்சார் சிந்தனைக்கு வலுச்சேர்க்கும்.

**பயன்பட்ட நூல்கள்**


❖ சாமிநாதையர், உ.வே. (ப.ஆ.), 2014: **புறநானூறு மூலமும் உரையும்**, சென்னை: டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்.

❖ சாமிநாதையர், உ.வே. (ப.ஆ.), 2018: **குறுந்தொகை மூலமும் உரையும்**, சென்னை: டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்.

- *சிவலிங்கனார், ஆ. (தொ.ஆ)., 2015:* **தொல்காப்பியம் – பொருளதிகாரம் (உரைவளம்)** *மீள்பதிப்பு, கோ.விசயராகவன் (ப.ஆ.), சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.*
- *தமிழவன், 2019 :* **மொழிதல் கோட்பாடும் தமிழும்**, *பாளையங்கோட்டை : மேலும் வெளியீட்டகம்.*
- *தமிழவன், 2023 :* **நவமார்க்சிய வழியில் திராவிடத் தமிழ்ச் சிந்தனைகள்**, *பொள்ளாச்சி : எதிர்வெளியீடு.*
- *ந.மு. வேங்கடசாமி நாட்டார், ந.மு. (உ.ஆ.), 2019 :* **அகநானூறு மூலமும் உரையும்**, *சென்னை : கௌரா பதிப்பகம்.*
- *ஜமாலன், 2020 :* **உடலரசியல்**, *சென்னை : காலக்குறி.*